ந.க.எண்.19112/07/இ2

பேரூராட்சிகள் ஆணையரகம்
குறளகம், சென்னை 108.

நாள்.26.8.08

**சுற்றறிக்கை**

பொருள் – பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சிகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் சரிவர பணியினை செய்யாமை சில அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

பார்வை – 1. இவ்வாணையரக சுற்றறிக்கை ந.க.எண்.5031/08/ஆ4 நாள்.24.6.08

2. இவ்வாணையரக சுற்றறிக்கை ந.க.எண்.19112/07/இ2 நாள்24.7.08.

பேரூராட்சிகளில் பணிபுரியும் துப்புரவு பணியார்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் என்ன என்பவைகள் குறித்து ஏற்கெனவே பார்வை 2ல் காணும் இவ்வலுவலக சுற்றறிக்கையில் அறிவுரைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. அவர்கள் செய்ய வேண்டிய துப்புரவு பணியினை விடுத்து, மற்ற வேலைகள் தான் செய்கிறார்கள் என்றும், அதில் மூத்தவர்களை விடுத்து, இளைய துப்புரவு பணியாளர்கள் தான் அதிகம் விவரம் தெரிந்தததது போல் மற்ற வேலைகள் செய்கிறார்கள் எனவும் புகார்கள் வரப்பெறுகிறது. மேலும் பணியாளர்களுக்கான சீருடை அணியாமல், அணிந்திருக்கும் உடையிலேயே, தனக்கு என்று வரையறுக்கப்பட்டிருக்கும் கடமையை தவிர மற்ற வேலைகளையும் செய்வதாகவும், மேலும் சில இடங்களில் துப்புரவு பணியாளர்கள், செயல் அலுவலரால் வரையறுக்கப்பட்ட பணிகளை விடுத்து, இந்த பணிகளை தான் செய்வேன், அந்த பணிகளை தான் செய்வேன் என்று கூறுவதாகவும் ஆணையரின் கவனத்திற்கு புகார்கள் வரப்பெற்றுள்ளன. சில இடங்களில் உள்ளூர் பிரமுகர்களின் ஆதரவுடன், துப்புரவு பணியாளர்கள் தங்களின் பணிகளுக்கு பொறுப்பான செயல் அலுவலர்களுக்கு மதிப்பு கொடுக்காமல், அவர்களால் வழங்கப்படும் அறிவுரைகளை பின்பற்றாமல் நடப்பதாகவும் எனக்கு தெரிய வருகிறது. இந்த மாதிரி நிகழ்வுகள் ஒரு சில பேரூராட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கிடையே ஒரு பிரச்சனையாக இருக்கிறது. அறிவுரைகளின்படி, யார் யார் என்னென்ன வேலைகள் செய்ய வேண்டும், எங்கெங்கு சென்று வேலை செய்ய வேண்டும் என்பதையெல்லாம் நிர்ணயிப்பது செயல் அலுவலர் தான். வேறு யாருக்கும் அந்த அதிகாரம் கிடையாது. மேலும் சில இடங்களில் சில பணியாளர்கள் வேலையும் செய்யாமல் உள்ளதாகவும் அவர்களுக்கான வேலை செய்ய சொல்லி அவர்களை செயல் அலுவலர்கள் நிர்பந்தப்படுத்தினால், செயல் அலுவலர்களுக்கு பிரச்சினை உண்டு பண்ணக்கூடிய வகையிலும் பணியாற்றி வருவதாகவும் தெரிய வருகிறது. இந்த செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது. இவ்வாறு வேலை செய்யாமல் அதிகார மேம்போக்காக இருக்கும் பணியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பேரூராட்சிகளில் இருக்கின்ற மொத்த துப்புரவு பணியாளர்கள் எத்தனை பேர், அறிவுரைகளை பின்பற்றாது, தன்னிச்சையாக செயல்படுகின்ற பணியாளர்கள் எத்தனை பேர், சரியான நேரத்திற்கு பணியினை செய்யாத பணியாளர்கள் எத்தனை பேர், அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு பணியினை செய்யாமல் அல்லது துப்புரவு பணியினை தவிர மற்ற வேலைகளை செய்பவர்கள் எத்தனை பேர் பணிக்கு வராத துப்புரவு பணியாளர்கள் பணிக்கு வந்ததாக உண்மைக்கு புறம்பான நிகழ்வினை பதிவு செய்யும் துப்புரவு கண்காணிப்பாளர்கள் ''தாமாகவே துப்புரவு மேற்பார்வையாளர்'' போன்று (self styled maistries) நடந்து கொள்பவர்கள் எத்தனை பேர், தெருக்களுக்கு குப்பைகளை அகற்ற செல்லும் பொழுது பிரச்சினைகள் எழுப்பும் பணியாளர்கள் எத்தனை பேர் போன்ற பணியாளர்கள் விவரத்தினை தொகுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கவனத்திற்கு 31.8.2008க்குள் கொண்டு சென்று அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் துப்புரவு பணிகளுக்கான எத்தனை வாகனங்கள் பயன்படுத்தப்படுகிறது, நாளொன்றுக்கு எத்தனை முறை வாகனங்களால் குப்பைகள் அகற்றப்படுகிறது, எத்தனை டன் குப்பைகள் அள்ளப்படுகிறது, வாகனங்களின் நடை (Trips), மொத்த பரப்பளவு என்ன போன்ற விவரங்களும் பேரூராட்சிகளில் சரியானபடி இல்லை பராமரிக்கப்படுவதில்லை

என்பது குறித்தும் புகார்கள் தொடர்ந்து வரப்பெறுகிறது. அதே போல் துப்புரவு வாகன ஓட்டுநர்களின் நடத்தையும், பணி விதிகளுக்கு முரணாக உள்ளது என்பதும் தெரிய வருகிறது. பணியாளர்கள் இல்லாத இடங்களில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை ஒரு குறிப்பிட்ட பகுதி/வார்டுகளில் செயல்படுத்திட தனியார்மயமாக்கி கொள்ளலாம் என ஏற்கெனவே பார்வை 1ல் காணும் சுற்றறிக்கை மூலமாக அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் எக்ஸ்னோரா, சுயஉதவிக்குழுக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் இப்பணிகள் செய்யப்படலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. இருப்பினும் சில இடங்களில் இந்த நடவடிக்கைகளை நிறைவேற்றாமல் உள்ளதால் குழப்பமான சூழ்நிலை நிலவுகிறது. சில பேரூராட்சிகளில் கொள்கை முடிவெடுத்து துரிதமாக செயல்படுத்தப்படாமல் உள்ளதும் இவ்வாணையரகத்தின் கவனத்திற்கு வரப்பெற்றுள்ளது.

சில இடங்களில் தலைவர்கள் தாமாகவே ஒரு சில நபர்களை பணியாளர்களாக ஈடுபடுத்தி அவர்களுக்கு தாங்களே ஊதியம் வழங்குவதாகவும் தெரிவித்து, அவர்களை நிர்வாகத்தில் தலையிடச் செய்து, பேரூராட்சியின் நிர்வாகத்திற்கு குந்தகம் விளைவிப்பதாகவும் தெரியவருகிறது. தலைவரோ அல்லது வேறு எவரேனும் ஊதியம் வழங்குவதாக இருப்பினும், அரசினால் அங்கீகரிக்கப்படாத பணியிடங்களில் செயல் அலுவலரால் அல்லது மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படாத எவரும் பேரூராட்சியின் பணியாளர்களாக இருக்க இயலாது. மேலும் அவர்கள் நிர்வாகத்தில் தலையிட்டு பணிகளை செய்வதும் சட்டப்படியாக தவறானதும், கண்டிக்கத்தக்க நிகழ்வுகளாகும். இதற்காக சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், அவ்வாறான வேறு எவரேனும் செயல் அலுவலருடைய நிர்வாகத்தில் தலையிடுவது செயல் அலுவலரின் கட்டுபாடற்ற நிர்வாகத்தினை வெளிப்படுத்துவதாக அமைகிறது. இது போன்ற நிகழ்வுகள் ஏற்படின், செயல் அலுவலர்கள் மீதும் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறிவுறுத்தப்படுகிறது.

பேரூராட்சியில் செயலாட்சி அதிகாரம் படைத்தவர் நிர்வாக அதிகாரி மட்டுமே. துப்புரவு பணியாளர்கள் உள்ளூர் பிரமுகர்களுடன் சேர்ந்து இதர பணிகளை செய்வது என்பது நடைமுறைக்கு ஒவ்வாதது மட்டுமின்றி விதிகளுக்கு முரணானதும் ஆகும். எனவே, அரசின் பிரதிநிதியாக செயல்படும் செயல் அலுவலர் எடுக்கும் சட்டப்படியான முடிவுகளை செயல்படுத்த மறுக்கும் அல்லது குந்தகம் விளைவிக்கும் பணியாளர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதுடன் அவர்களுக்குரிய பணியை செய்திட பணிப்பது, கண்காணிப்பதும் செயல் அலுவலரின் முக்கியமான பணியாகும்.

எனவே, மேலே வழங்கப்பட்ட அறிவுரைகளை கவனமாக படித்தறிந்து பணியாளர்களை உரிய பணிகளை செய்திட பணிக்கவும் தவறும் பணியாளர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் கோரிய தகவல்களை **31.8.2008**க்குள் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பவும் அறிவுறுத்தப்படுகிறது.

இப்பொருள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை செயல் அலுவலர்கள் **31.8.08**க்குள் சம்மந்தப்பட்ட உதவி இயக்குநர்களுக்கு அனுப்புதல் வேண்டும். உதவி இயக்குநர்கள் பேரூராட்சிகளின் ஆணையருக்கு **5.9.08**க்குள் ஒரு தொகுப்பு அறிக்கையினை அனுப்பி வைக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒம்/– கே.கோபால்,**

ஆணையர்

பெறுநர்

அனைத்துப் பேரூராட்சி செயல் அலுவலர்கள்

நகல் அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்

நகல் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

நகல் இருப்புக்கோப்பு